**தலைப்பு 295 – வாணிப திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வாணிப திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று. அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் வாணிப திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உறுப்புரையின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாணிப திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **செயற்பாடு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்** | | |
| (i) | வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு பதிலாக வருமானம் சேர்க்கப்படுகின்ற வேறு திணைக்களங்கள் அவ் வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் வருமானமில்லாத பெறுவனவுகளாக காண்பிக்கப்பட வேண்டியினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 38,318,501 ஆன வருமானமில்லாத பெறுவனவுகள், ரூபா 35,251,116 ஆன கட்டணம் மிகை கட்டணம், தண்டப்பணம், மற்றும் உரிம வருமானங்களிலிருந்து உருவான பணம் போன்றன காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் வருமானமில்லாத பெறுவனவாக ரூபா 35,251,116 ஆன பெறுமதி குறிப்பிடப்பட்டிருப்பது, ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகள் மொத்த பெறுமதியில் குறுக்கு பதிவு பெறுவனவு பெறுமதி குறைக்கப்பட்டு காசால் பெறப்பட்டவைகள் மட்டும் காசு பாய்ச்சல் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டமையினால் ஆகும். எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது குறுக்கு பதிவு பெறுவனவுகளும் உள்ளடக்கப்பட்டு தோராயமாக கணக்கு தாரிப்பதற்கு குறிக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிக்காட்டல் இல 06 பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் தனிநபர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவின பெறுமதி ரூபா 85,286,391 ஆன தொகையாக காணப்படினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 116,967,772 ஆக குறிப்பிடப்பட்டதினால் ரூபா 31,681,381 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடொன்று உண்டாகுவதற்கு காரணமாகியிருப்பது, தனிநபர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவில் குறுக்கு பதிவு குறைக்கப்பட்டு காண்பிக்கப்படல் மற்றும் மாற்றல்கள் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய காணிக்கை மற்றும் பங்களிப்பு தொகை பெறுமதி தாமத குறைப்பாட்டினால் தனிநபர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவின் கீழ் காண்பிக்கப்பட்டமையினாலாகும். எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது குறுக்கு பதிவு உள்ளடக்கப்பட்டு தோராயமாக கணக்கு தயாரிப்பதற்கு மற்றும் சரியான வகைப்படுத்தலின் கீழ் தரவுகள் உள்ளடக்கப்படுவதற்கு குறிக்கப்பட்டது என குறிப்பிடுகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது சரியான வகைப்படுத்தலின் கீழ் தரவுகள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மானியங்கள் மற்றும் மாற்றல் செலவின பெறுமதி ரூபா 38,043,981 ஆக காணப்படினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 952,094 ஆக குறிக்கப்பட்டதினால் ரூபா 37,091,887 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் தரவுகள் உள்ளடக்கப்படும் போது ரூபா 37,091,887 ஆன காணிக்கை மற்றும் பங்களிப்பு பண பெறுமதி, தனிநபர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினமாக குறிக்கப்பட்டதன் காரணத்தினால் ரூபா 37,091,887 ஆன வேறுபாடு உண்டாகியுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைப்பாடுகள் தவிர்க்கப்படுவதற்கு குறிக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன். | மேற்கூறப்பட்டவாறு |
| (ஆ) | **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்**<br>----------------------------------- | | |
| (i) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவிடல்கள் ரூபா 2,447,779 ஆக காணப்படினும் அப் பெறுமதி ரூபா 192,242 என காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளமையினால் ரூபா 2,255,537 குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவிடல்கள் பெறுமதியில் குறுக்கு பதிவு ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற முற்பணம் அறவிடல்கள் அகற்றப்பட்டு காசினால் அறவிடப்பட்டமை மட்டும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படப்பட்டமை காரணத்தினால் உங்களால் காண்பிக்கப்பட்ட பெறுமதியினால் குறைவொன்று ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறுக்கு பதிவு உள்ளடங்கலாக அனைத்து அறவிடல்களும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக் கொண்டேன். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிக்காட்டல் இல 06 பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண செலுத்தல்கள் பெறுமதி ரூபா 3,140,090 ஆக காணப்படினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 2,846,740 ஆக காண்பிக்கப்பட்டுள்ளமையினால் ரூபா 293,350 ஆன முற்பண செலுத்தல்கள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண செலுத்தல்கள் மொத்த பெறுமதியில் முற்பண பீ கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற குறுக்கு பதிவுகள் செலவு வைத்தல் அகற்றப்பட்டு காசினால் செலுத்தல்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டமை காரணத்தினால் நீங்கள் குறிப்பிட்ட பெறுமதியினால் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் முற்பண பீ கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செலவு வைத்தல்களும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக் கொண்டேன். | மேற்கூறப்பட்டவாறு |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | காசுப் பாய்ச்சல் கூற்றில் சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகள் கையகப்படுத்தல் என ரூபா 1,526,211 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் சொத்து கையகப்படுத்தல் ரூபா 1,181,127 மட்டுமாக காணப்பட்டது. | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மூலதன செலவினத்தின் கீழான மூலதன சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழான செலவினம் மற்றும் திறன் வளர்ச்சியின் கீழான செலவினம் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டமையின் ஊடாக வேறுபாடு உருவாகியுள்ளதுடன் எதிர்காலத்தில் சரியான வகைபாட்டின் கீழ் தரவுகள் உள்ளடகப்பட்டுவதற்கு குறிக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது சரியான வகைபாட்டின் கீழ் தரவுகள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்**

| | | |
|---|---|---|
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்பு பெறுவனவுகளாக ரூபா 358,500 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 25,850 ஆக காணப்பட்டது. | நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலினுள் வைப்பு பெறுவனவு காண்பிக்கப்பட்டிருப்பது குறுக்கு பதிவு பெறுவனவு அகற்றப்பட்டு காசினால் பெறப்பட்டவை மட்டும் உள்ளடக்கப்பட்டமையினாலானதுடன் குறுக்கு பதிவு பெறுவனவு அகற்றப்படுவதில் உங்களால் காண்பிக்கப்பட்ட வேறுபாடு ஏற்பட்டுள்ளதென குறிப்பிடுகின்றேன். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் இல 06 பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் 2019 திசெம்பர் 31 திகதிக்கு திணைக்கள புத்தகங்களில் காணப்படுகின்ற மீதி மற்றும் திறைச்சேரி கணினி அச்சு மீதியின் இடையில் ரூபா 291,366 ஆன வேறுபாடொன்ற அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினுள் அவ் வேறுபாடு தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காமை காரணத்தினால் இன்னுமாக ரூபா 278,943 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | திறைச்சேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்கள் இடையில் இணங்காமை காணப்பட்டது அடிப்படை ஆண்டின் கணக்கிற்காக அல்லாததுடன் அது 2005 ஆம் ஆண்டிற்கு முன்னரிருந்து இணங்காமையென அவதானிக்கப்பட்டது. அதற்காக தற்போது 2007 தொடக்கம் மீண்டும் கணக்கு இணக்கல் மேற்கொள்ளப்படுகின்றதுடன் அதன் அடிப்படையில் மீதிகள் தீர்க்கப்படல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், கணக்கு இணக்கப்படுவதற்கு தொடர்புடைய கணினி அறிக்கைகளுடன் தொடர்புடைய அனைத்து பதிவேடுகளும் தேடப்படுகின்றதென்பதனால் இந்த அனைத்து செயற்பாடுகளினதும் செயன்முன்னேற்றத்தின் அடிப்படையில் அடுத்த ஆண்டுகளின் கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இணக்கமின்மைகள் விரைவாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதென குறிப்பிடுகின்றேன். | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக காணப்படினும் அவ்வாறு செயற்படாத காரணத்தினால் 03 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 58 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையான வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 3,264,224 ஆன நிதியேற்பாடு குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பது, திட்டமிடப்பட்ட பணிகள் மற்றும் நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்காக போதுமான விதத்தினால் ஆவதுடன் மீளாய்வாண்டினுள் பல வேலைத்திட்டங்கள் கொவிட் 19 தொற்று பரவல் காரணத்தினால் இரத்து செய்தமையினால் நிதியேற்பாடு எஞ்சியது. | மதிப்பீடு இயலுமான விதத்தில் முழுமையாக சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாடொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் அம் முறைமையின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அமைப்பு வினைத்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவ் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கு அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் நிதி கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பொன்று பேணிச் செல்லப்படுகின்றதுடன் அவ் அமைப்பு வினைத்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுவதுடன் அச் செயற்பாடுகளின் எழுத்துமூல பிரதி கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேனென குறிப்பிடுகின்றேன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| அவதானிப்புக்கள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ii பகுதியின் 05 ஆம் பந்தி | அரச நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்பட்டு உயர்ந்தபட்சம் 15 சதவீதத்திற்கு கீழ் மீளாய்வு செய்யப்பட்டு திறைச்சேரியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.அவ்வாறாயினும் ஈட்டுச் சட்டத்தின் கீழ் கடன் கொடுக்கும் நிறுவனம் அங்கீகரித்தல் தொடர்பாக அறவிடப்படுகின்ற ரூபா 100,000 ஆன கட்டணம் 2003 ஆண்டின் பின்னர் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஈட்டுச் சட்டத்தின் கீழ் கடன் கொடுக்கும் நிறுவனம் அங்கீகரித்தல் தொடர்பான ரூபா 100,000 ஆன கட்டணம் திருத்தப்படுவதற்காக வரிசை அமைச்சின் உடாக நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ் அங்கீகாரம் பெறப்பட்டவுடனே தொடர்புடைய கட்டணம் திருத்தப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 சனவரி 01 இற்கு 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 174,257 ஆன இடர் கடன் மீதிகளுக்கு தொடர்பாக எந்தவொரு அறவிடல்களும் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு தூதரகங்களில் கடமையில் ஈடுபட்டிருந்தமையினால் அவர்களின் கடன் தவணை அறவிடல் வாணிப திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படாததுடன் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். | நிலுவை கடன் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளிநாட்டு அமைச்சின் ஊடாக வாணிப திணைக்களத்திற்கு மாதாந்த கணக்கு பொழிப்பறிக்கை ஊடாக வரவு வைக்கப்படும். இது வரையில் வெளிநாட்டு அமைச்சு வாணிப திணைக்களத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமையினால் மீதிகள் நாளதுவரையாக்கப்படவில்லை.<br>கடன் தவணை அறவிடல் தொடர்பாக விபரங்கள் விரைவாக கிடைக்கப்பெற்றவுடன் புத்தகங்களில் குறித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | |
| **(ஆ)** | அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் பிரகாரம் ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 12,138 கூடுதலாக அறவிடப்பட பட்டிருந்ததுடன் அதற்காக 02 ஆண்டுகள் கடந்திருப்பினும் கணக்காய்வு திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் தவணைக்குள் உள்ளடங்குகின்ற இரு உத்தியோகத்தர்கள் தற்போது வெளிநாட்டு தூதரகங்களில் இணைக்கப்பட்டுள்ளமையினால் அவர்கள் திணைக்களத்தில் கடமைக்கு சமூகமளித்தவுடனே கூடுதலான அறவிடப்பட பணத்தினை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது திணைக்களத்தினுள் கடமையாற்றும் மூன்னு உத்தியோகத்தர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்படப்பட்டவை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | கூடுதலாக அறவிடப்பட்ட கடன் பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 3.1 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாண்வாண்டின் செயல்நடவடிக்கை திட்டம் பிரகாரம் 2018 இன் 02 ஆம் இலக்க Anti-Dumping and Countervailing Duties Act மற்றும் 2018 இன் 03 ஆம் இலக்க SafeGuard Measures Act செயற்படுத்தப்படுவதற்கு தொடர்பான பிரமாணங்கள், உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் வழிக்காட்டிகள் வெளியிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அப் பணிகள் நிறைவு செய்திருக்கவில்லை. | சட்ட வரைஞர் திணைக்களத்தினால் முறையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், தொடர்புடைய பிரமாணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரிகளிடமிருந்து அவ்வப்போது பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளக சுற்றறிக்கை மற்றும் வழிக்காட்டிகள் தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன். சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக முன்வைப்பதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | சட்டம் செயற்படுத்தப்படுவதற்கு தொடர்புடைய பிரமாணங்கள், உள்ளக சுற்றறிக்கை மற்றும் வழிக்காட்டிகள் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மின்னனு வரிசை முகாமைத்துவ முறைமை செயற்பாடுத்துவதற்காக தோற்ற சான்றிதழ் வெளியிடுவதற்கு தொடர்பான ஏனைய சேவைகளான தொடர்புடைய பதிவேடுகள் அங்கீகரித்தல் உள்ளடங்கலாக சுங்கவரி பங்கு சான்றிதழ் வெளியிடல் மற்றும் கம்பனி பதிவு செய்தல் அமைப்பொன்று தயாரித்து செயற்படுத்தல் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | மின்னனு வரிசை முகாமைத்துவ அமைப்பின் அடிப்படை பணிகள் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படினும் அதில் ஏனைய சேவைகள் செயற்படுத்தப்படல் தொடர்பான பணிகள் நிறைவேற்றப்படும் போது மீளாய்வாண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று தாக்கதல் காரணத்தினால் குறித்த காலவரையறைக்குள் அப் பணிகள் நிறைவேற்றல் தொடர்பாக தாமதமொன்று ஏற்பட்டது. | திட்டமிடப்பட் பணிகள் குறித்த காலவரையறைக்குள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஈட்டுச் சட்டத்தின் கீழ் கடன் தருகின்ற நிறுவனமாக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு புதிய விண்ணப்பபடிவம் முன்வைத்த 05 நிறுவனங்களுக்கு மற்றும் முன்னைய ஆண்டில் வாணிப பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு வருட காலப்பகுதிக்காக மட்டும் கடன் கொடுக்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட 02 நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட அங்கீகாரம் நிறைவடைவதற்கு முன்னர் காலம் நீடிக்கப்படுவதற்கு அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய கடன் கொடுக்கும் நிறுவங்களை அங்கீகரிக்கும் குழு குறித்த வண்ணம் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அக் காரணத்தினால் தொடர்புடைய அங்கீகாரங்கள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | கடன் கொடுக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் சபை, அமைச்சரினால் இல 2220/56 மற்றும் 2021 மார்ச் 25 திகதிய வர்த்தமானி ஊடாக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் முதலாம் கூட்டம் 2021 ஏப்ரல் 29 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன் எதிர்கால கூட்டங்கள் விரைவாக நடத்தப்பட்டு விண்ணப்பதாரிகளின் தகுதி கருத்திற் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் கொடுக்கும் நிறுவனத்திற்கு தொடர்புடைய அங்கீகாரங்கள் விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (1) உறுப்புரை மற்றும் 40 (2) (1) உறுப்புரை பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அவ் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரையிலும் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வரிசை அமைச்சினாலும் உள்ளக கணக்காய்வொன்று மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வி பதவியொன்று அங்கீகரித்து கொடுக்கமாறு கோரப்பட்டு நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் விண்ணப்பப்படிவமொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வொன்று காலக்கிரமத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 152 ஆக காணப்படினும் உள்ளவாரான பதவியணியினர் 114 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் விசேட மற்றும் முதல் வகுப்பின் 03 பதவிகளும், பிரதி/உதவி வாணிப பணிப்பாளர் பதவிகள் 06 உம் உள்ளடங்கலாக 38 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | சிரேஸ்ட நிலை பதவி வெற்றிடங்கள் 11 இல் 6 இற்காக ஆட்சேர்பபு செய்வதற்கு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய பரீட்சையானது பரீட்சை திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் மூன்றாம் நிலை பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பித் தருமாறு ஒருங்கிணைந்த பணிப்பாளர் நாயகத்திடம் கோரப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்காக காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |